**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.203/2020 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3 |
| Name : | பழனிமுத்து |
| Father's Name/Husband Name: | ஜோதிவேல் |
| Village : | லாடபுரம் |
| Taluk : | பெரம்பலூர் |
| Age : | 56/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 22.07.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 முதல் 3 வரை ஆஜர்.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது லாடபுரம் கிராமத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சம்பவத்தின் போது நான் ஊரில் இல்லை. சம்பவ சமயத்தில் நான் அ.சா.1 காட்டில் நான் வேலை செய்யவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 19.09.2018ம் தேதி 9 மணியளவில் நான் அ.சா.1 காட்டில் டிராக்டர் மூலம் உழவு ஓட்டிக் கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. வேலை செய்து கொண்டிருந்த போது ஆஜர் எதிரிகள் சம்பவயிடத்திற்கு வந்து அ.சா.1யை கெட்ட வார்த்தையால் திட்டி மூன்று எதிரிகள் கையாலும், குச்சியாலும் தலையில் மற்றும் உடம்பில்

அடித்ததாகவும் அதில் அ.சா.1ன் தலையில் பலத்த அடிப்பட்டு மண்டை உடைந்துவிட்டது என்றும் சண்டையை தடுக்க வந்த அ.சா.2யை எதிரிகள் தள்ளிவிட்டு கொலை மிரட்டல் விடுத்ததை நான் நேரில் பார்த்தேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

தற்போது நாங்களும் எதிரிகளும் சமாதானமாக சென்றுவிட்டோம் என்றால் சரிதான். அதனால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.